(ஆ) அத் திட்டம் நிறைவேற அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? அதில் எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. பு. குழந்தைவேலு : (அ) மதுரை—சாத்தூர் இணைப்புச் சாலை போடுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன் வராததே தாமதத்திற்குக் காரணம்.

(ஆ) இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு ரூ. 1,79,150 கடனாக நகராட்சிக்குக் கொடுத்துள்ளது. திட்டம் முழுவதுமாக 1982—83-க்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 2,63,650. இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 1,41,650.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஒப்பந்தக்காரர்கள் கிடைக்காத காரணத்தால் அந்த வேலையில் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னதாக நினைக்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் ஏன் வருவதற்கு மறுக்கிறார்கள்? நீண்ட நாட்களாகவே வேலை ஆரம்பிக்கப்பட்டும் நிறைவு பெறாமல் இருப்பதால் விருதுநகருக்குள்ளே போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய வாய்ப்பும் இருப்பதால் அரசு முனைந்து அந்தப் பணியைச் செய்து முடிப்பதற்கு என்ன ஏற்பாடுகளை செய்ய இருக்கிறது ?

மாண்புமிகு திரு. பு. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒப்பந்தக்காரர்களுக்கு அதிகமான லாபம் கிடைப்பதில்லை. அதன் காரணமாகத்தான் பலர் பணிகளைச் செய்வதற்கு முன்வருவதில்லை. மேலும் தற்போது பொருட்களின் விலை அடிக்கடி ஏறிக்கொண்டிருப்பதால் அதற்கு ஏற்ற முறையிலே ஒப்பந்தக்காரர்களுக்கு அரசாங்கமும் பணம் கொடுத்தால்தான் வருகிறார்கள். இல்லை என்றால் வருவதில்லை. ஆகவேதான் இந்த நிலை. ஆனாலும் இவைகளை எல்லாம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

காவேரிப்பட்டணம் பேருராட்சியின் வருமானம்.

* வினா எண் 977—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டணம் தேர்வுநிலைப் பேருராட்சியின் வருமானம் நிர்வாகச் செலவிற்கே போதுமானதாக இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் இரண்டு மைல் சுற்றளவின் பகுதிகளை இணைத்து இயங்கிக் கொண்டிருக்கும் சினிமா கொட்டகைகளின் வருமானத்தை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கேளிக்கை வரி சட்டத்தின்படி இவ்வாறு செய்வது சாத்தியமல்ல.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, காவேரி பட்டணம் பேரூராட்சி தற்போது வட்டத் தலைநகராகக் கூடிய தகுதி பெற்று வருகிறது. அங்கே அரசு அலுவலகங்களும், அலுவலர் குடியிருப்புகளும், தொழிற்கூடங்களும் ஏற்படக்கூடிய நல்ல வாய்ப்பு இருப்பதால் உடனடியாக அதாவது தேர்தலுக்கு முன்பாகவே அங்குள்ள சுற்றுப்புற பகுதிகளை காவேரிப்பட்டணம் பேரூராட்சியோடு இணைக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி கேளிக்கை வரி. அந்தக் காவேரிப்பட்டணம் பேரூராட்சிக்கு கிடைக்குமா என்பதுதான். ஆனால் அப்பேரூர் இணைப்பைப் பற்றி அருமை நண்பர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்த காவேரிப் பட்டணம் நகரைச் சுற்றி ஐந்தாறு சினிமாக் கொட்டகைகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. அதன்மூலம் வருகின்ற வருவாயைக் கொண்டு நல்ல முறையில் மக்களுக்குத் தேவையான திட்டங்களை உருவாக்குவதற்குரிய தகுதி அற்றதாக அதாவது பலம் இல்லாததாக கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. ஆகவே, கிராமம் நகரம் என்ற பாகுபாட்டை நீக்குகின்ற வகையிலே அதாவது சிறு நகரம், பெருநகரம் என்று சொல்லப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்குகின்ற வகையிலே அங்கே சுற்றுப்புற கிராமங்களை எல்லாம் அரசு உடனடியாக காவேரிப்பட்டணம் பேரூராட்சியுடன் சேர்ப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, காவேரிப்பட்டணம் பேரூராட்சியின் எல்லைக்குள் ஒரு திரைப்பட அரங்கு கூட இல்லை. தற்பொழுது இரண்டு நடமாடும் திரை அரங்குகளும், பகுதி நிரந்தர திரைப்பட அரங்கு ஒன்றும் காவேரிப் பட்டணம் பேரூராட்சி எல்லையைச் சுற்றி உள்ள 2 கிலோமீட்டர் தொலைவிற்குள் உள்ளன. கேளிக்கை வரி மூலமாக பெறப்படும் வருவாய் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கும், கேளிக்கை வரி மீதான மேல் வரி மற்றும் காட்சி வரி காவேரிப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்திற்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆகவே இதன்மூலமாக வருவாயை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.